# இலங்கையே தமிழர் பிரச்னையை தீர்க்க வேண்டும்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 26 இதழ்: 243

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 12-10-1991

## - இந்தியப் பிரதமர்

(புதுடில்லி)
"இலங்கைத் தமிழர் பிரச்சனை அதன் உள்நாட்டு பிரச்சனை. அதற்கு இலங்கை அரசே தீர்வுகாண வேண்டும்" என இந்தியப்பிரதமர் திரு பி. வி. நரசிம்மராவ் தெரிவித்துள். (4ம் பக்கம் பார்க்க)

## துரிதப்படுத்தக் கோரிக்கை

(கொழும்பு)
ஜனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணை நிராகரிக்கப்பட்டதைபடுத்து, தமிழர் பிரச்னைத்தீர்வைத்துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி பிரேமதாஸாவை பல கட்சிகள் கோரியுள்ளன.

மேற்படி குற்றப்பிரேரணை மனுவால் தடைப்பட்டிருந்த இனப்பிரச்னை தீர்வுக்கான (4ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதிக்கு கிடைத்த வெற்றி

(கொழும்பு)
சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தோல்வியுற்றது. ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவுக்கு கிடைத்துள்ள வெற்றியாகுமென அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.
(4 ம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணையை மீண்டும்

# நாடாளுமன்றம் கொண்டுவர

# சட்ட நடவடிக்கை ஆரம்பம்!

## சபாநாயகருக்கு எதிராக வழக்குத் தாக்குதல்!!

(கொழும்பு)
ஜனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணையை மீண்டும் நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் சேர்த்துக்கொள்ள சபாநாயகருக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிடவேண்டுமெனக்கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கை வழக்கறிஞர் திரு தர்மதாஸாகோமஸ் நேற்று உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணையை முதலில் பெற்றுக்கொண்ட சபாநாயகர், அதனை நிராகரித்திருந்தார். இதையடுத்து சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை எதிர்க் (4-ம் பக்கம் பார்க்க)

## சிராவஸ்தியில் தங்க இடமில்லை

(கொழும்பு)
சரோஜ் உறுப்பினர்கள் சிராவஸ்தியில் தங்க இடமில்லை என கொழும்பு பத்திரிகையொன்று செய்திவெளியிட்டுள்ளது.

மேற்படி தங்குமிடவசதியும், பாதுகாப்பு ஒழுங்கு நட 4ம் பக்கம் பார்க்க)

21 மீனவர் விவகாரம்:

# இந்தியா இலங்கையிடம் கடும் ஆட்சேபம்!

(புதுடில்லி)
தமிழ்நாடு மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் மேற்கொண்டுவரும் தாக்குதல் நடவடிக்கைகள் குறித்து இலங்கை அரசிடம் இந்திய அரசு தனது கடும் ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளது.

இது பற்றி இந்திய தகவல் துறை அதிகாரி ஒருவர் தகவல் தெரிவிக்கையில்; கடந்த மாதம் 19-ஆம் திகதி இராமேஸ்வரம் மீனவர்கள் 24 பேரைக் கடலில் வைத்துக் கைது செய்த இலங்கைக் கடற்படையினர், அவர்கள் அனைவரையும் கடலில் குதிக்கும்படி பலவந்தப்படுத்தினர். கடலில் குதித்த மீனவர் (4ம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்னை குறித்து ஆராய சுவிஸ் உபஜனாதிபதி

# இந்தியா விஜயம்

(ஜெனீவா)
இலங்கை இனப்பிரச்னை தீர்வு குறித்து ஆராய சுவிஸ்லாந்தின் உபஜனாதிபதியும் வெளியுறவு அமைச்சருமான திரு. ரீன பெல்யர் ஒருவார விஜயம்ஒன்றை மேற்கொண்டு இந்தியா வந்துள்ளார்.

இலங்கைப் பிரச்சினைக்கான தீர்வின்றியே சுவிஸில் தங்கியுள்ள தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதுபற்றி முடிவெடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (3ம் பக்கம் பார்க்க)

## சைக்கிளில் செல்ல படையினர் தடை

(கொழும்பு)
தாண்டிக்குளம் ஊடாக சைக்கிளில் செல்ல படையினர் தடைவிதித்துள்ளனர்.

வவுனியாவிலிருந்து தாண்டிக்குளம் ஊடாக முன் அனுமதியில்லாமல் சைக்கிளில் செல்வதையும் சைக்கிளை உருட்டிச் செல்வதையும் படையினர் (4-ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் துரித சிங்கள குடியேற்றம்

(திருகோணமலை)
திருகோணமலை நகரத்தில் சிங்களவர் துரிதமாக மீளக் குடியேற்றப்படுகிறார்கள். இவர்களது குடியேற்றங்களுக்கு இராணுவமும், அரசாங்கமும் ஊக்கமளித்து வருகின்றன என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (152)

# 1,524 கோடி ரூபா நிதி

# பாதுகாப்புக்கு ஒதுக்கீடு!

(கொழும்பு)
1992ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை பிரதமர் திரு. டி. பி. விஜயதுங்கா நேற்றுநாடாளுமன்றில் சமர்ப்பித்தார்.

1992ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் பாதுகாப்புக்கென 1,524 கோடியே 99 லட்சத்து 76 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்படி தொகை பொலிஸ் படை உட்பட சகல படைகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது இது செலவு ஒதுக்கீட்டின் ஆறில் ஒன்றெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1992ம் ஆண்டுக்கானசெலவீட்டுத்தொகை 10 ஆயிரத்து 60 கோடியே 13 லட்சத்து 60 ஆயிரத்து 600 ரூபா எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## எம், பி. நியமனம்

(கொழும்பு)
நாடாளுமன்றத்தில் வெற்றிடமாகவுள்ள ஐக்கிய சோஷலிச முன்னணி தேசிய பட்டியலில் எம் பி பதவிக்குக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிச் செயலாளரும், ஐக்கிய சோஷலிச முன்னணியின் செயலாளருமான ரீ. சி. ராஜரெத்னம் லுரே நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் தொடர் (4-ம் பக்கம் பார்க்க)

## மஹர சிறையில் 17 புளொட் உறுப்பினர்

(கொழும்பு)
மாலைதீவிலிருந்து நாடுகடத்தப்பட்ட 17 புளொட் உறுப்பினர்களும் தற்போது மஹர சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை அரசின் கோரிக்கையின் பேரில், ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட மேற்படி 17 பேருக்கும் மன்னிப்பு வழங்கப்பட்டு மாலைதீவிலிருந்து (4-ம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழருக்கு வேலைவழங்கக்கூடாது

(யாழ்ப்பாணம்)
தமிழகத்திலுள்ள இலங்கையர்களுக்கு எந்த வேலையும் வழங்கக்கூடாது என தமிழக அரசு கட்டளை பிறப்பித்துள்ளது.

தனது இனம் தமிழர்களுக்கு அடைக்கலம் அளிக்குமென்று சொன்ன பல இலங்கைத் தமிழர்கள் தமிழ்நாடு அரசாங்கத்தால் பல தொல்லைகளுக்கு உட்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.
(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## வைத்திய நிலையம்

புளியங்கூடல் சந்தியில் சேவையாற்றிய நடனமுருகன் வைத்திய நிலையம் தற்காலிகமாக யாழ்ப்பாணம் சத்திரச் சந்தி கொட்டடி றோட்டில் இயங்கிவருகின்றது. டாக்டர் கந்தையா நவரத்தினம். தலைமை நிலையம்: வேலணைத் துறையில் டாக்டர் ஐயம்பிள்ளை கந்தையா. (சி-5455)

## ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் சகல தரப்பினருக்கும் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும் உங்கள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும் தொடர்பு நேரில் சனி, ஞாயிறு காலை 11-00 - 12-00 மணி. S. ஜெயராசா 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். [சி.4962]

## ENGLISH FOR ADULTS

வளர்ந்தோருக்கான ஆங்கிலம், வேலையிலிருப்போர் வேலைவாய்ப்பு பெறவிருப்போர், நேர்முகப்பரீட்சை, மேல்படிப்பு, வெளி நாட்டு தொடர்பு போன்றவைக்கானபயிற்சி வகுப்புகள் தனித்தனி வசதியான நேரங்களிலும் இடங்களிலும் ஆரம்பிக்கப்படவுள்ளன. தரித்த மீட்டல் செயல் முறை Goodshepherd 52, செம்மணி வீதி (கல்விகற்றோருக்கு அருகாமை) நல்லூர் (சி-5473)

## தவறிவிட்டது

நடராசா இராஜேஸ்வரம் ஆகிய எனது 528202274 V இலக்கமுடைய அடையாள அட்டை பாசையூருக்கும் - யாழ். ஆஸ்பத்திரி வீதிக்குமிடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் 78, சிவன் வடக்குவீதி, சமால் ஸ்ரோரில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும் (சி-5472)

## ஆண்டு - 5

புலமைப் பரிசில் பிரபல பாடசாலைகளுக்கான அனுமதி மாதிரிப் பரீட்சை வினாத்தாள் (தமிழ், கணிதம், ஆங்கிலம்) 13 - 10 - 91 ஞாயிறு வெளியிடப்படும். பரீட்சைக்கான மாதிரி வகுப்புகளும் நடைபெறுகின்றன. 219, நாவலர் வீதி யாழ்ப்பாணம். (சி-5474)

## பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது சம்பந்தமாக எவராவது அல்லது எக் குழுவாவது ஆக்கபூர்வமான ஆலோசனைகளை முன்வைக்கும் பட்சத்தில் அதனை அக்கறையுடன் ஆராய அரசாங்கம் தயாராயிருப்பதாக பிரதமர் திரு. டி. பி விஜயதுங்க மீண்டும் தெரிவித்துள்ளார். (க)

## புதிய சாதனை

(வாஷிங்டன்)

டென்னிஸ் உலகில் 2-வது இடத்தை வகித்துவரும் மே. ஜெர்மனியைச் சேர்ந்த டென்னிஸ் வீராங்கனையான ஸ்ரெபி கிராப் புதிய உலக சாதனையொன்றை ஏற்படுத்தியுள்ளார்.

இவர் இதுவரை 500 (பெண்கள்) ஒற்றையர் ஆட்டத்தில் மிக இளம்வயதில் வெற்றிபெற்று சாதனையை ஏற்படுத்தியுள்ளார் சாதனை வீராங்கனையானஸ்ரெபி கிராப்புக்கு தற்போது 22 வயது. (வி)

## வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளிலும்முதலுதவி பயிற்சி வகுப்புகளை மாணவர்களுக்கு போதிக்கும்படி வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் சுற்று நிருபம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முதலுதவிப் பயிற்சி அளிப்பதற்கு வேண்டிய ஒழுங்குகளை சென். ஜோன் அம்புலன்ஸ் அமைப்பினர் செய்து தருவதற்குஎந்நேரமும் ஆயத்தமாக இருப்பதாக மேற்படி அமைப்பின் மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி சுகந்தன் இன்னாசித்தம்பி தெரிவித்துள்ளார். (வி)

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**

## இரு இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் உள்ள முகவர் ஒருவருக்கு தலா ஒரு லட்சம் ரூபா கொடுத்து ஜேர்மனி செல்ல விசா பெற்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர்கள் கட்டுநாயக்காவிமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இருவரும் போலி விசாவும், போலிக் கடவுச்சீட்டும் வைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (152)

## வறுமை நிவாரண உணவு முத்திரை விநியோகிக்க ஏற்பாடு

(மானிப்பாய்)

6வது தொடர் இலக்க வறுமை நிவாரண முத்திரைகள் தற்போது கணக்கிடப்பட்டு யாழ். மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கு யாழ். சமூக சேவைப்பகுதியினரால் விநியோகிக்கப்படவுள்ளது.

இவ்வுணவு முத்திரைகள் முன்பு 5 வது கட்ட உணவுமுத்திரைகளைப் கொண்டவர்களுக்கே முதலில் மீண்டும் வழங்கப்படும்.

இதேவேளை புதிதாக பெற விண்ணப்பித்த பலருக்கு அவர்களின் வருமான எல்லைக்கமைய உணவு முத்திரைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

# ★ நன்றி ★

இந்த இடம் ஞாபகம் இருக்கிறதா?
உள்ளூர் உற்பத்தி பற்றிக் குறிப்பிட்டிருந்தோம்:
யாழ் மாநகர தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச்சங்கம்
தரும் புதிய உள்ளூர் உற்பத்தி
சுவையானது; வெளிநாட்டு பொருட்களுக்கு நிகரானது
நீங்களே; மூக்கில் மேல் விரலை வைப்பீர்கள்
சற்றுப் பொறுமையை கையாளுங்கள்
இன்னும் சில தினங்கள் பொறுத்திருங்கள்
இந்த இடத்தில் உண்மை வெளிக்கும்

★ நன்றி ★


**யாழ். மாநகர தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனைவுக் கூட்டுறவுச்சங்கம்**

விளம்பர வடிவமைப்பு:
செனித் ஜோ. எகட்டன்

(சி-5459)

# 90-ம்நாள்நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

12-10-1991



**வெற்றிவேல் வசந்தன்**
[கோபு]
பருத்தித்துறை

தாயின் மடியில்: 29-12-1974

தாயக மீட்பில் 16-07 1991

தந்தை, தாய், சகோதரர்கள், உற்றார், உறவினர்.

பன்னைக்கட்டை
பருத்தித்துறை,
தமிழீழம்.

(சி-5469)

# ஓராம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**வடிவேலு வேலுப்பிள்ளை**
[மகாராசா]
வல்வெட்டித்துறை.

தோற்றம்: 02-07-1906

மறைவு: 23-09-1990

திதி: 12-10-1991

குடும்பத்தின் ஒளி விளக்காய்
பாசமுள்ள தந்தையாய்
ஆண்டொன்று சென்றாலும்
மாறாது உங்கள் உருவம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# 795ம் நாள் நினைவஞ்சலி



செல்வன்
**சுப்பிரமணியம் பேரின்பம்**
[வண்ணம் அண்ணா]

அன்னையின் மடியில்: 17-08-69
அநியாய அழிப்பில்: 3-08-89
சாந்திப் பூசை: 12-10-91

வண்ணமே! வண்ணமே! எங்கள் அன்பு வண்ணமே!
எமை எல்லாம் விட்டுப் பிரிந்தனையோ வண்ணமே!
தாய்க்கோர் குலவிளக்காய் வண்ணமே!
தந்தைக்கோர் உயிர் ஆனாய் வண்ணமே!
தமிழ் மண்ணுக்கோ உதவி நின்றாய் வண்ணமே!
தமிழ் ஈழம் மலரும் முன் உன் வண்ண முகம் வாடியதேன் வண்ணமே!
உன் மன ஆசையல் என்றென்றும் தமிழ் ஈழம் மலரும்.

உன் ஆத்மாவும் சாந்தியடையும்,
உன் பிரிவால் வாடும்

அன்புத் தந்தை, அன்புத் தாய்,
அன்புச் சகோதரர்கள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

சபிண்டீகரணம் கீழ்க்கண்ட இல்லத்தில் நடைபெறும்.
சகலரும் அன்புடன் ஏற்றுக்கொள்ளவும்.

வே. சுப்பிரமணியம் (மணியம் கங்காணி)
(ஓய்வுபெற்றவர், சுகாதார இலாகா)
இல: 6. பாலாவி குடியேற்றம்,
பொலிகண்டி, வல்வெட்டித்துறை.

(சி 5412)

★ நம்பிக்கையில்லாப் பிரேரணை

# சபாநாயகர் முகமட்டிற்கு எதிரானவாக்கெடுப்புவிபரம்

(கொழும்பு)

சபாநாயகர் அஹ்ஹாஜ் முகமட்டிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்பு விபரம் வருமாறு:

ஆதரவாக - 85 வாக்குகள், எதிராக - 123 வாக்குகள்; மொத்தம் - 208 வாக்குகள் அளிக்கப்பட்டன.

ஆதரவாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி (66), ஈ. பி. ஆர். எல். எவ். (திரு.சுரேஸ் பிரேமச்சந்திரன், திரு. ராஜா குகனேஸ்வரன், திரு. இமானுவேல் சில்வா, திரு கே. நவரட்ணம், திரு. பிரின்ஸ் காசிநாதர், ம. ஐ முன்னணியும் ஐ. தே. க. அதிருப்தியாளர்களான திரு. காமினி திஸநாயக்கா, திரு. லலித் அத்துலத்முதலி, திரு பிரேமச்சந்திரா, திரு. சமரவீர வீரவன்னி, திரு சந்திரா கங்கந்த, திரு கே. வின்சன் பெரேரா, திரு பிரேமரத்ன குணசேகர, திரு லக்ஷ்மன் செனிவிரத்னவும் (எட்டுப் பேர்) மற்றும் ஏனைய 6 பேரும் வாக்களித்தனர்.

எதிராக ஐ தே. க. வின் 112 உறுப்பினர்களும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்-4 உறுப்பினர்களும், ஈரோஸ் (02- சேகுதாவுத் பஷீர், அயூப்), கூட்டணி (05) திரு. ஜி. கருணாகரன் திரு. ஜே. திவ்யநாதன் (ரெலோ) திரு. மாவை சேனாதிராசா, திரு. பரராஜசிங்கம் ஜோசப், திரு கே. சீனிவாசன் (கூட்டணி).

இந்தப் பிரேரணை மீதான வாக்கெடுப்பின் போது எதிரணியில் இணைந்த திரு. ஆரியரத்ன ஜெயதிலக, திரு ரவீந்திர சமரவீர, திரு. எவ். ஏ. முத்துபண்டாரவும் சுதந்திரக்கட்சியை சேர்ந்த திரு. ஸ்ராலின் திலகரத்னவும் சபையில் இருக்கவில்லை. (இ)

---

வடக்கு - கிழக்கு அகதிகளுக்கான

## நிவாரணத்தைக் குறைக்குமாறு புனர்வாழ்வு அமைச்சு பணிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் உள்ள அகதிகளுக்கு வழங்கப்படும் உலர் உணவுப் பொருட்களின் பெறுமதி இம்மாதம் 1ம் திகதி முதல் குறைக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக புனர் வாழ்வு, புனரமைப்பு, சமூக சேவைகள் அமைச்சின் செயலர் வடக்கு-கிழக்கு அரசாங்க அதிபர்களுக்கு அவசர பணிப்புரையை அனுப்பியுள்ளார்.

இதுவரை ஒரு அங்கத்தவர் உள்ள குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த 84ரூபா பெறுமதியான 1 வாரகால நிவாரணத்தை ரூபா 75.60 ஆகவும் இருவர் உள்ள குடும்பத்திற்கு வழங்கப்பட்டுவந்த 154 ரூபா பெறுமதியான நிவாரணத்தை ரூபா 138-60 ஆகவும் 3 பேருள்ள குடும்பத்திற்கு 210 ரூபா நிவாரணத்தை 189 ரூபாவாகவும் 4 பேருக்கான நிவாரணத்தை 252 ரூபாவிலிருந்து 126-80 ஆகக் குறைக்குமாறும் அமைச்சின் செயலர் பணித்துள்ளார்.

ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட அங்கத்தவர் கொண்ட குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த 315 ரூபா நிவாரணம் ரூபா 283-50 ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது. (சி)

---

### கல்விக் கண்காட்சி

(உடுவில்)

மருதனார்மடம் கல்விக்கோட்டப்பாடசாலைகளின் கல்விக் கண்காட்சி இன்று சனிக்கிழமை இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். இக்கண்காட்சி நேற்றும் நடைபெற்றது.

மருதனார்மடம் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. ச தனஞ்செயன் தலைமையில் நடைபெறும் இக்கல்விக் கண்காட்சி வடமாநிலகல்வி பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக்கலந்து கொள்கிறார்.

இராமநாதன் கல்லூரியில் ஆண்டு 6 முதல் 11 வரையான கண்காட்சியும் இணுவில்சைவ மகாஜன மகாவித்தியாலயம் அமெரிக்கமிஷன் த. க, பாடசாலை ஆகியவற்றில் ஆண்டு 1 முதல் 5 வரையான கண்காட்சியும் நடைபெறும்.

---

## மரணக் கொடுப்பனவு வழங்க அனுமதி

(யாழ்ப்பாணம்)

திருமணச் சான்றிதழ் இல்லாத பயங்கரவாத நடவடிக்கையின் போது கொல்லப்பட்ட அரச கட்டுத்தாபன ஊழியர் பலருக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படாது இருக்கின்றன.

இவர்களுக்கு கொடுப்பனவு வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட திணைக்கள கட்டுத்தாபனத் தலைவர்கள் அரச அதிபரின் பரிசீலனையின் பின் வழங்கலாம் என பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கை இல. 41/91 மூலம் கேட்கப்பட்டுள்ளனர். (152)

---

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ தேசிய ஆசிரியர் ஒன்றியத்தினரால் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த வேலைத் திட்டங்களைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை 10மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெறும்.

---

### இனப்பிரச்னை தீர்வு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்து திரு. ரீனி பெல்பர் நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது: "சுவிஸ்ஸர்லாந்தில் 10,000 இலங்கைத் தமிழர்கள் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர். இவர்களில் ஒரு குறிப்பிட்ட பகுதியினருக்கே அடைக்கலம்] வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் அகதிகள் 'அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலயத்தின் உதவியுடன் அவர்கள் நாட்டிற்கு திருப்பி அனுப்பப்படவுள்ளார்கள். எனினும் இலங்கையில் தற்போது நடைபெற்றுவரும் உள்நாட்டு போரால், இந்த நடவடிக்கை சரியான காலம் வரும் வரைக்கும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இங்குள்ள இலங்கை தமிழர்கள் ஒரு சமுதாயம் போல் எந்தவித பிரச்னையையும் ஏற்படுத்தாமல் வசித்து வருகிறார்கள். எனினும் போதைவஸ்து கடத்தல் மற்றும் சில நடவடிக்கைகள்மூலம்ஒருசிலர்சுவிஸின்சட்டம் ஒழுங்கிற்குஇடையூறு விளைவிக்கிறார்கள்.

இலங்கை பிரச்னை தீர்வு விரைவில் சாத்தியப்படுமானால் அகதிகளை திருப்பி அனுப்பலாம் என்றும் அவர் கூறினார். (சி)

---

# 'தமிழீழ சமுதாயம் உருவாக வேண்டும்'

(யாழ்ப்பாணம்)

"அச்சமின்றாத, பிச்சைக்கு ஏந்திநிற்காத, சாதி, சமய, பிரதேச வேறுபாடற்ற ஒரு தமிழீழ சமுதாயம் உருவாக வேண்டும்".

இவ்வாறு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்ற தமிழ் விழாவில் தமிழீழ விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த மு: வளநாதன் பேசும் போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: "தமிழினத்தின் அவலங்களை கலைஞர்கள் உருக்கொடுத்து மக்கள் முன் கொண்டுவரவேண்டும். தமிழினத்தின் விடிவை நோக்கி மக்களை இழுத்துச்செல்ல வேண்டிய நிலை இங்குள்ள படைப்பாளிகளினதும், கலைஞர்களினதும் கடமையாகும்-

கலையும் பண்பாடும் போராட்டத்தோடு ஒருமைப்பாடாக இருக்க வேண்டும். என்றோ ஒரு நாள் மலரப் போகும் தமிழீழத்தில் கலையையும், பண்பாட்டையும் எடுத்துச் சொல்லும் கடமை எழுத்தாளர்களின் முக்கிய பொறுப்பாகும்

வியக்கத்தக்க சாகசங்கள் புரியும் போராளிகளினது உன்னத தியாகங்களை எழுத்தில் வடித்தால்தான் நாளைய இளம் சமுதாயம் இதைப்பற்றிச் சிந்திக்கும்.

எதிரியின் இராணுவம்நேரில் வரும்போது இளைஞர்கள், யுவதிகளை பெற்றோர்கள் அவர்களிடமிருந்து காப்பாற்ற முடியுமா?

போராட்டத்தில் நீங்கள் இணைந்தால் மிக விரைவில் தமிழீழம் மலரும். நீங்கள் இணையாது போனால் தமிழீழம் பெறுவது தாமதமாகும் எதுவாக இருந்தாலும் என்றோ ஒருநாள் தமிழீழம் மலரத்தான் போகின்றது. (152)

---

## லூயிஸ் யோசேப் அடிகளாரே!

பொன்விழவு காணுகிற பூசியரே! சேசுபணி தன்விழவு காணுகிற சற்குருவே - மன்னுபுகழ் லூயீஸ் யோசேவ் அடிகளாரே! மகிழ்ச்சியுடன் வாய் இனிக்கக் கூறுகிறோம் வாழ்த்து

அல்லைப்பிட்டி - மண்டைதீவு
பங்கு மக்கள்

[அருட்தந்தை லூயிஸ் யோசேப் அடிகளார் இன்று பொன்விழா காணுகிறார்]

---

## இராசி பலன்

சனிக்கிழமை
12- 10- 1991
தமிழுக்கு புரட்டாதி 26

பஞ்சமி வைகறை5-45வரை அனுஷம் பி. ப. 125 வரை. சித்தயோகம் இராகுகாலம் 9- 02 முதல் 10-32வரை, சுபநேரம்மாலை 3.02 முதல் 5-32 வரை.

மேடம்:- கடினமான போக்கு பணியால் துன்பம், குடும்ப கவலை

இடபம்:- திருமணயோகம், பொருள்வரவு, தொழில் லாபம்.

மிதுனம்:- தானதர்மம், தொழில்முதலீடு, காரியசித்தி

கடகம்:- தொழில் கஸ்டம், பணமுடை, இனசனபகை.

சிங்கம்;- மனசஞ்சலம், காரிய அலைச்சல், யோசனை.

கன்னி:- புதிய முயற்சி, தொழில் சிறப்பு, வசதியான மாற்றம்

துலாம்:- குடும்ப மோதல், வயோதிபர் தொல்லை, அவமதிப்பு.

விருச்சிகம்:- மனச்சந்தோஸம், உல்லாசபயணம், வெகுமதி.

தனுசு;- தாய் உடல் நலம் பாதிப்பு, மனக்குறை, விரக்தி.

மகரம்:- மனச்சிறப்பு, வாக்கு வன்மை, தொழில் வெற்றி.

கும்பம்;- சகோதரர் உதவி. புத்திரர் மகிழ்ச்சி, புகழ்

மீனம்:- அதிஸ்டம்நழுவுதல் நோய் தணியும், மனக்குறை.

ஜோதிடர்

---

## இன்று

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின் விஷேட ஆட்சிக்குழுக் கூட்டம்இன்று12ம் திகதி சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு எஸ். டிவகலாலா தலைமையில் யாழ் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனையில் நடைபெறும்.

---

## வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தின் கைத்தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான முயற்சியில். தமிழீழ ஆய்வு நிறுவன மாவட்டப் பிரிவு செயற்பட்டுவருகின்றது. கைத்தொழில்துறை சார்ந்த வல்லுநர்களிடமிருந்து ஆக்கபூர்வமான ஆலோசனைகளும். ஆக்கங்களும் எதிர்பார்க்கப்படுகிறது.

இத்துறை சம்பந்தமான வெளியீடுகள், துண்டுப்பிரசுரங்கள் போன்றவற்றை வைத்திருக்கும் அன்பர்கள், தமிழீழ ஆய்வு நிறுவனம். யாழ். மாவட்டச் செயலகத்துடன் தொடர்புகொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

---

## தமிழீழ காவல்துறை பதவி வெற்றிடங்கள்

[1] நிர்வாக அலுவலர்

(அ) கல்வித்தகைமை: ஆகக்குறைந்தது க.பொ. த. [உயர்தரம்]

(ஆ) வயதெல்லை: 25 — 45 வரை

[2] எழுது வினைஞர்

(அ) கல்வித்தகைமை: க. பொ த. [சா. த.] ஒத்தியடைந்திருத்தல் வேண்டும். தமிழ், கணிதம் உட்பட 05 பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) வயதெல்லை: 18 — 35 வரை

[3] தமிழ் தட்டெழுத்தாளர்
சுருக்கெழுத்தாளர்

(அ) கல்வித் தகைமை: க.பொ.த [சா. த]ஆறு பாடங்கள். தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்தில் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்]

(ஆ) வயதெல்லை: 18 — 35 வரை

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்துடனும் சான்றிதழ்களுடனும் 14-10-91, 15-10-91 ஆகிய இரு நாட்களிலும் நேரில் சமூகம் தரவும்.

நேரம்: காலை 9 மணி முதல் 12 மணிவரை

இடம்: தமிழீழக் காவல்துறைத் தலைமைச் செயலகம்

பொறுப்பாளர்
தமிழீழக் காவல்துறை

[எ 1234]

சார்க் மாநாடு

# ராடர் சாதனங்களும் பாதுகாப்புக்கென தருவிப்பு!

[கொழும்பு]

கொழும்பில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவிருக்கும் 'சார்க்' மாநாட்டுக்கும், சார்க் நாடுகள் கலந்து கொள்ளும் விளையாட்டுப் போட்டிகளுக்கும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஐயாயிரம் பொலிஸாருக்கு, வெளிநாடுகளில் விசேட பயிற்சி பெற்ற நிபுணர்களால் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. வெடிமருந்துகளைக் கண்டுபிடிப்பதற்காக பொலிஸ் நாய்களுக்கு விசேட பயிற்சியும், அளிக்கப்பட்டுடன் மிகநவீன பாதுகாப்பு உபகரணங்களும், ராடர் சாதனங்களும் வெடிகுண்டுகளைக் கண்டுபிடிக்கும் மிகநவீன கருவிகளும், வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளன. (வி)

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் கலையரசி பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி அண்மையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

மட்டுவில் கொத்தணி அதிபர் ஆ. பொ. செல்லையா இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

### ஜனாதிபதிக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிருப்தியாளர்கள் தமக்கு ஆதரவாக அரச தரப்பு எம். பிக்கள் 40 பேர் இருக்கின்றனர் என்பதை நிரூபிப்பதற்கு அதிருப்தியாளர்களுக்கும் இருந்த சந்தர்ப்பம் இதன் மூலம் நிர்மூலமாக்கப்பட்டுள்ளதாகவும் அரசியல் அவதானிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

### மஹர சிறையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாடு கடத்தப்பட்டனர்.

கடந்த வாரம் கொழும்பு வந்து சேர்ந்த இவர்கள் மேலதிக விசாரணைக்காக மஹர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ)

### துரிதப்படுத்த

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளைத் தொடருமாறும், பிரச்னையை விரைவில் தீர்க்குமாறும் சில தமிழ் கட்சிகள் உட்பட பல கட்சிகள் ஜனாதிபதியை கோரியுள்ளன.

இதேவேளை இது பற்றி தகுந்த கவனமெடுக்கப்படுமென ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### இலங்கைத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழகத்தில் தொடர்ந்தும் இலங்கைத் தமிழர் பலர் கைதுசெய்யப்பட்டு வருகிறார்கள். (சி)

### இலங்கையே

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வார்.

இத்தகவலை ராஜாங்க அமைச்சர் திரு. எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்தார். அண்மையில் இந்தியப் பிரதமரை சந்தித்ததுபற்றி கூறுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தமிழக அரசின் உத்தரவின்படி பதிவு செய்தால் தங்களை திருப்பி அனுப்பி விடுவார்களென்ற அச்சத்தில் பலர் பதிவுசெய்யவில்லை என்றும் அவர் கூறினார். (சி)

## ஆசிரியர் பயிற்சி கல்லூரி அடுத்த வருடம் ஆரம்பம்

(கொழும்பு)

வவுனியா, கொட்டகலைப் பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்டு வரும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள், அடுத்த வருட ஆரம்பத்தில் திறந்துவைக்கப்படும் என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அண்மையில் கொழும்பில் தெரிவித்தார்.

கொட்டகலை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் மலையகத் தமிழ் ஆசிரியர்களுக்கே முக்கியத்துவம் வழங்கப்படுமென்றும், 75 வீதமான தமிழர்களுக்கும், 25 வீதமான சிங்களவர்களுக்கும் இதில் இடம் அளிக்கப்படுமென்றும், இதே போல், வவுனியா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் ஆசிரியர்களுக்கு இடமளிக்கப்படும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (வி)

## விசேட பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கலாநிதி தியாகராசா ம. ம. வி. பாடசாலை அபிவிருத்திச்சங்க விசேட பொதுக்கூட்டம் நாளை ஞாயிறு காலை 9 மணிக்கு யா/வக்ரோறியா கல்லூரி மண்டபத்தில் அதிபர் செ. தேவதாசன் தலைமையில் நடைபெறும்.

## சிங்களமொழிச் சட்டத்தால் பாதிப்புற்றோர் கவனத்திற்கு

[யாழ்ப்பாணம்]

சிங்கள மொழிச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களும் தங்கள் முறைப்பாடுகளை எழுத்து மூலம் எழுதி வடமாகாண ஓய்வூதியச் சங்க சம்மேளனத்துக்குத் தெரியப்படுத்துமாறு சங்கம் கேட்டுள்ளது.

பொது நிர்வாக அமைச்சு அண்மையில் வெளியிட்ட சுற்றறிக்கை மூலம் சிங்களச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு அவர்கள் அரச விரோதச் செயல்களில் ஈடுபடாதுபோனால் நிவாரணம் வழங்குமாறு சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களுக்குச் சுற்றறிக்கை மூலம் கேட்கப்பட்டதற்கிணங்க சங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (152)

## நடமாடும் செயலகம் 280 பிரச்னைகளுக்கு தீர்வு காணப்பட்டது

(யாழ்ப்பாணம்)

அல்வாயில் நடந்த நடமாடும் செயலகத்திலும் கடும் பாதிப்புக்குள்ளான 66 பிரச்னைகளில் 50 பிரச்னைகள் உடனடியாகத் தீர்க்கப்பட்டன.

இவ்வாறு யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது; மொத்தமாக 280 பிரச்சனைகளுக்கு அங்கு தீர்வு காணப்பட்டது. வீடமைப்பு அதிகார சபையில் 43 பிரச்னைகளில் 10 பிரச்னைகளுக்கு கொள்வனவு சம்பந்தமானதென்றும். ஆட்பதிவுத் திணைக்களத்தில் 15 பிரச்னைகளுக்கும் உடனடியாகத் தீர்வு காணப்பட்டதென்றும் சொன்னார்.

இந்த நடமாடும் செயலக முதல் அமர்வில் 37 திணைக்கள சபைகளின் தலைவர்கள் பங்கு பற்றினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (152)

## பென்சன் வவுச்சர்கள்

(மானிப்பாய்)

செப்டம்பர் மாதத்துக்குரிய பென்சன் வவுச்சர்கள் நேற்று யாழ். செயலகத்திலிருந்து உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (71)

### 21 மீனவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் மூவர் கடலில் மூழ்கி இறந்தனர். ஏனைய 21 மீனவர்களும் புங்குடுதீவில் கரையேறியபோது. விடுதலைப்புலிகளால் காப்பாற்றப்பட்டுப் பின்பு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் அவர்கள் ஒப்படைக்கப்பட்டனர்.

இதுபோன்ற சம்பவங்கள் இலங்கை இந்தியக்கடல்பிராந்தியத்தில் நடைபெற்று வருவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இந்தியா தனது ஆட்சேபத்தை நேற்றுப் புதுடில்லியிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் டாக்டர் நெவில் கனகரட்னவிடம் தெரிவித்தது. (வி)

### ஜனாதிபதிக்கு எதிரான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியினர் கொண்டுவந்தவர்.

இந்தப்பிரேரணை சபையில் தோல்வியடைந்ததையடுத்தே உயர்நீதிமன்றத்தின் உதவி நாடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

எனினும் ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணையை ஏற்றுக் கொள்ளவோ, நிராகரிக்கவோ அரசியலமைப்புப்படி சபாநாயகருக்கு அதிகாரம் இருப்பதால் இந்த வழக்கை உயர்நீதிமன்றம் நிராகரிக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

### சிராவஸ்தியில்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடிக்கை காரணமாகவே ஈரோஸ் உறுப்பினர்களின் வருகை தாமதப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி இரு விடயங்கள் குறித்தும் அண்மையில் கொழும்புசென்ற ஈரோஸ் உறுப்பினர்கள் இருவர் ஜனாதிபதியுடன் பேச்சுக்கள் நடாத்தியதும் தெரிந்ததே. (சி)

## எதிர்க்கட்சியினரும் பதவிவிலகவேண்டும் - தொண்டமான்

[கொழும்பு]

சபாநாயகர் தமது பதவியை ராஜினாமாச் செய்யவேண்டுமானால் எதிர்க்கட்சியினர் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்யவேண்டுமென அமைச்சர் தொண்டமான் நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார்.

அல்ஹாஜ் எம். எச். முகமட் பதவிவிலக வேண்டுமென எதிர்க்கட்சியினர் கோருகிறார்கள். அப்படி அவர் பதவிவிலகுவதாயின் ஜனாதிபதி மீதான அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணை முன் அறிவித்தலை இரகசியமாகத் தயாரித்த சகலரும் தத்தமது எம். பி. பதவிகளை ராஜினாமா செய்யவேண்டும்.

எதிர்க்கட்சியினரே பெரும் அரசியல் சதியில் ஈடுபட்டு சபைக்கு அவமரியாதை ஏற்படுத்திவிட்டதாகவும் திரு. தொண்டமான் கூறினார். (சி)

## தேடுதல் நடவடிக்கை

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை, ஓட்டமாவடி, பேய்த்தாழை ஆகிய பகுதிகளில் இராணுவத்தினரின் தேடுதல் நடவடிக்கை அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது.

பாடசாலை மாணவர்கள் உட்படப் பல இளைஞர்கள், குடும்பஸ்தர்கள் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் எங்கே தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவலையாவது அறியப் பெற்றோர்கள் எவ்வளவோ முயற்சிகள் மேற்கொண்டும் பலன் ஏற்படவில்லை. (153)

## ருமேனிய அதிகாரியை விடுவிக்க பேரம்

(புதுடில்லி)

மரணதண்டனை விதிக்கப்பட்ட 3 போராளிகளைவும் விடுதலைசெய்யாவிட்டால் தம்மால் கடத்திச்செல்லப்பட்ட ருமேனிய நாட்டு தூதரக பொறுப்பாளர் கொலைசெய்யப்படுவாரென காலிஸ்தான் விடுதலைப் புலிகள் எனக்கூறிக்கொள்ளும் அமைப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளையில் ருமேனிய நாட்டு தூதரக அதிகாரியை கடத்தியது தாமே என காலிஸ்தான் விடுதலைப் புலிகள் கூறிக்கொள்வது வெறும்பொய் என ஏனைய 3 போராளிகள் அமைப்புக்கள் கடிதம் ஒன்றின் மூலம் எச்சரிக்கை விடுத்துள்ளன.

ருமேனிய நாட்டு தூதரக அதிகாரி கடத்தப்பட்ட சம்பவத்தில் 4 விடுதலை அமைப்புக்கள் சம்பந்தப்பட்டதாக அவை கடிதம் ஒன்றை இந்தியாவில் பி. ரி. ஐ அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளன

முன்னாள் இராணுவ ஜெனரல் ஜே. எஸ். வைத்தியா கொலைசெய்யப்பட்ட விவகாரம் தொடர்பாகவே மேற்படி 3 போராளிகளுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (க)

## போட்டிப்பரீட்சை

(மானிப்பாய்)

பதிவாளர்நாயகம் திணைக்களத்தின் பதிவாளர் சேவையல் இரண்டாந்தரத்தின் பதிவாளர் பதவிகளுக்கு சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பரீட்சை எதிர்வரும் டிசம்பர் மாதம் 21ம், 22ம் திகதிகளில் பரீட்சை ஆணையாளரினால் கொழும்பில் நடாத்தப்படும். அரச சேவையில் சேர்த்துக்கொள்ளப்படும்புதிய அலுவலர் 3 வருட அனுபவமான சேவைக்கு உட்படுத்தப்படுவர்.

அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர் ஒரு வருட காலம் முடியும் வரை பதில் கடமையாற்றும் அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

விண்ணப்பம் செய்வோர் இம்மாதம் 30-ஆம் திகதிக்கு முன்னர் பதிவாளர் நாயகம், கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல்வேண்டும்.

இது சம்பந்தமான முழு விபரங்களும் கடந்த 30ஆம் திகதி வெளிவந்த வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. (71)

## காணி உத்தியோகஸ்தர் நியமனம் கோரப்படுகிறது

(திருமலை)

வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் 70 காணி உத்தியோகத்தர்களை நியமிக்க வடக்கு கிழக்கு காணி நிருவாகத் திணைக்களம் நடவடிக்கைகளைமேற்கொண்டுள்ளது.

குடியேற்ற அலுவலர் மற்றும் காணி அலுவலகத்தில் ஆகக்குறைந்தது ஏழு வருடம் கடமையாற்றியோர் இத்தகைய நியமனங்களுக்குட்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (152-153)

## அவ்ரோவிலிருந்து பொதிகள்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவ முகாமுக்குள்ளிருக்கும் இராணுவத்தினருக்கு நேற்றுக் காலை 8-30 மணிக்கு அவ்ரோ விமானத்திலிருந்து போடப்பட்ட 17 பொதிகளும் இராணுவ முகாமுக்கு வெளியேஉள்ள வெளிகளில் விழுந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (வி)

### எம். பி.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாக தேர்தல் ஆணையாளருக்கும், நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (153)

### சைக்கிளில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தடைசெய்துள்ளனர்.

இதுதொடர்பாக படையினர் வவுனியாவில் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தும் வருகிறார்கள். (இ)

## பரீட்சை

(யாழ்ப்பாணம்)

நிலஅளவைத் திணைக்களத்தின் நிலஅளவை நாயகத்தால் உத்தரவு பெற்ற படம்வரைவோராக தொழில் புரிவதற்கான சான்றிதழ் வழங்குவதற்கான பரீட்சை கொழும்பில் இம்மாதம் 26ந் திகதி நடைபெறவிருக்கிறது.

பரீட்சை இரண்டு பகுதிகளாக நடைபெறவிருக்கிறது. முதலாவது பகுதி ஆற்றுகை ... தல் பரீட்சை, இரண்டாவது பகுதி படம்வரைதல் பரீட்சை. இரண்டாவது பகுதி படம் வரைதல் பரீட்சை டிசம்பர் மாதம் 14ம், 15ம் திகதிகளில் இடம்பெறவிருக்கிறது.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஒக்டோபர் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Postoffice Lanka under Licence Number B/10836/81.